சிறப்பிதழ்
Special Issue

31-ஆனி 2050
16-July 2019

ISSN : 2321-0737

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*

*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. S. Rajaram*
*Dr. Aranga. Pari*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Chitra*
*Dr. P. Velmurugan*
*Dr.A. Ekambaram*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. R. Jagadheesan*
*Dr. P. Selvakumar*
*Dr. T. Jegathesan*
*Dr. R.Vijayarani*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. Sinnathamby Santhirasegaram*
*Dr. S. Ramesh*
*Dr. Manivannan Murugesan*
*Dr. A. Rameez*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

சிறப்பிதழ் : தமிழியல் ஆய்வு மாநாடு -2019
தமிழாய்வுத்துறை
வேளாளர் மகளிர் கல்லூரி
ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா.

## தமிழர் வாழ்வில் தமிழின் பங்கு

சிறப்பிதழ் ஆசிரியர்கள்
**Special Issue Editors**

முனைவர் ஆர். நிர்மலாதேவி
தமிழ்த்துறைத்தலைவர், வேளாளர் மகளிர் கல்லூரி,ஈரோடு

தமிழ்த்திரு ஜெ. கார்த்திக்

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

5 சிறப்பிதழ்
Special Issue

சிறப்பிதழ்
**Special Issue**

31-ஆனி 2050
16-July 2019

ISSN : 2321-0737


| | | | |
|---|---|---|---|
| 1. | பூர்ணராஜன் கௌரி | தமிழரும் தமிழியலும் | 1-4 |
| 2. | ஜெ. ஜெயபாரதி | கால்டுவெல்லின் தமிழ்ப்பணி | 5-8 |
| 3. | இரா. அம்சராஜ் | பழந்தமிழர் வாழ்வியலில் அறக்கோட்பாட்டுச் சிந்தனைகள் | 9-11 |
| 4. | இரா. பாலாஜி | தனிநாயக அடிகளின் செம்மொழி நோக்கு | 12-16 |
| 5. | பா.எழில்செல்வன் | பாரதி ஓர் புதிர் | 17-20 |
| 6. | க.குணாளினி | குறுந்தொகை குறிஞ்சித் திணையில் தோழிகூற்றில் உளவியல் | 21-24 |
| 7. | ஆ.மெர்சி ஆஞ்சலா | தமிழர் வாழ்வில் நலமளிக்கும் திரிகடுகம் | 25-28 |
| 8. | கே. பரிமளம் | அகநானூற்றில் உளவியல் கூறுகள் | 29-33 |
| 9. | இரா. அகிலா | இலக்கண இலக்கியத்தில் இசையும், வைணவத் தாலாட்டுப் பாடலும் | 34-37 |
| 10. | ஆ. வெற்றிச்செல்வி | சங்க அக இலக்கியங்களில் தோழி கூற்றில் புலனாகும் வாழ்வியல் நெறிகள் | 38-42 |
| 11. | இரா.கயல்விழி | சங்க இலக்கியத்தில் பயிர்த்தொழில் முறைகள் | 43-46 |
| 12. | வி. சரளா | சங்க காலத்தில் மகளிர் நிலை | 47-50 |
| 13. | சீ. காயத்ரி | சங்க இலக்கியத்தில் வான்வெளியும் பருவ மாறுபாடுகளும் | 51-54 |
| 14. | ச.பிரேமகுமாரி | சங்க இலக்கியத்தின் கலை இலக்கியத் தனித்தன்மை | 55-61 |
| 15. | ஏ.யோகசித்ரா | சங்க இலக்கியப் பாடல்களில் புலனாகும் கவித்துவ மாட்சிகளின் மிளிர்வுகள் | 62-66 |
| 16. | சி.முத்துமாலை | சித்தர்களின் சிந்தனை | 67-70 |
| 17. | மு. பழனியம்மாள் | சித்தரிலக்கிய வகைமைகள் | 71-73 |
| 18. | கோ.காயத்ரி | தமிழ்மொழி வழி வாழ்வியல் புலப்பாடு | 74-77 |
| 19. | ஜா.வளர்மதி | தலைமக்களின் வாழ்வியல் கூறுகள் | 78-80 |
| 20. | பரதிதேவி | தேவநேயப் பாவாணரின் தமிழ்த்தொண்டு | 81-85 |
| 21. | ஜெ.நீலகேசி | தொல்காப்பியத்தில் இசை பற்றிய செய்திகள் | 86-88 |
| 22. | ஆர். நிர்மலா தேவி | சங்க இலக்கியங்களில் புழங்குப் பொருட்களும் அணிகலன்களும் | 89-95 |
| 23. | சே.கிருஷ்ணவேணி | பத்துப்பாட்டில் உவமைகள் | 96-98 |
| 24. | மு.கல்பனா | பழந்தமிழரின் கடல் வாணிபம் | 99-101 |
| 25. | ஆ.வேணிஸ்ரீ | பாட்டியல் நூல்களின் அமைப்புக் கோட்பாடு | 102-105 |
| 26. | அ. மாணிக்கம் | பாய்த்தொழில் மற்றும் பாய்த்தொழிலாளரை அடையாளம் காட்டிய தமிழ் | 106-110 |
| 27. | மு. ராஜகுமார் | பெண்களின் துயரங்களை வெளிப்படுத்துவதில் தற்கால இலக்கியத்தின் பங்கு | 111-116 |
| 28. | ஆ. சரோஜினி | பெருங்கதையில் அகமரபுக்கூறுகள் | 117-120 |
| 29. | மரு மு.ராமன் | போகரின் மருத்துவ முறைகளும் தீரும் நோய்களும் | 121-125 |
| 30. | க.நிர்மலா தேவி | இதழியல் - ஓர் பார்வை | 126-128 |
| 31. | இரா.கௌசல்யா | திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் கோயில் வரலாறும் வழிபாட்டு முறைகளும் | 129-131 |
| 32. | ம.உ.மாராணி | தோல் நாவல் பிரதிபலிக்கும் சமூகச் சிதைவுகள் | 132-136 |
| 33. | வே. வளர்மதி | மாசாத்தியாரின் பாடல்வரிகளில் ஆளுமைக் கூறுகள் | 137-141 |
| 34. | வே.ரேணுகா | புறநானூற்றுப் போர் வாழ்வு | 142-145 |
| 35. | மு.தெய்வேந்திரன் | குறிஞ்சிப்பாட்டில் மரபுப்பெயர்கள் | 146-150 |
| 36. | சு.காளிசுவரி | திருக்குறள் குறிப்பறிதலில் நோக்கு | 151-153 |
| 37. | ச.அனிதா<br>சோபியா மார்கிரேட் | ச.அகத்தியலிங்கனாரின் குறள்மொழியில் திருக்குறள் மீள்பார்வை | 154-158 |
| 38. | மா. வசந்தகுமாரி | இளம்பூரணரின் சொல் பொருள் வரையறுத்தல் குறித்த சேனாவரையரின் மறுப்பு | 159-163 |
| 39. | வீ.நதியா | அகநானூற்றில் யாப்புறுப்பு - ஒப்பீடு | 164-171 |
| 40. | அ.சந்திரம்பா | அண்ணமார் சுவாமி கதைப்பாடலில் பெண்களின் உளவியல் | 172-174 |
| 41. | மோகனாம்பிகைஅரசு | கண்ணதாசன் திரையிசைப் பாடல்கள் | 175-178 |
| 42. | ப. சங்கீதா | சங்க மாந்தரின் நுண்ணறிவு | 179-182 |
| 43. | அ.குருமூர்த்தி | பெரியார் சிந்தனைகள் - கலைகள் | 183-189 |
| 44. | பெ. ரேவதி | ஈரோடு மாவட்ட நாட்டுப்புற பாடல்களில் பன்முகப்பார்வை | 190-192 |
| 45. | பெ. பிரபு | நாட்டுப்புற மக்களின் பாடல்கள் மற்றும் மூட நம்பிக்கைகள் | 193-195 |
| 46. | ப.திலகவதி | தமிழர் வாழ்வில் அணிகலன்களின் நுட்பமும், வகைப்பாடும் | 196-199 |
| 47. | ந.கவிதா | இலக்கியங்களில் பண்டைத் தமிழரின் பண்பாடும், வாழ்க்கை முறையும் | 200-205 |
| 48. | டே.வில்சன் | குறுந்தொகையில் அகவாழ்வு | 206-210 |
| 49. | P. Thenmozhi | Village Administration of the Imperial Cholas | 211-215 |
| 50. | T. Adalarasu | Figures of speech in Kanthapuranam | 216-218 |
| 51. | S. Mohan Raj | Impermanence is a Law of Universe - Thiruvalluvar's Ideology - an Induced Wisdom | 219-225 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# தனிநாயக அடிகளின் செம்மொழி நோக்கு

முனைவர் இரா.டயானாகிறிஸ்டி
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை - 625 018.

ஒருமொழி செம்மொழி என்ற தகுதியைப் பெறுவதற்கு பல்வேறு தனித் தகுதிகள் உண்டு. அவற்றை ஒப்புநோக்கியே செவ்வியல் மொழியாக அறிவிக்கப்படுகின்றது. தமிழ்மொழி செம்மொழிக்குரிய தகுதிகளைப் பெற்றிருந்தும் இத்தனை ஆண்டுகளுக்குப் பின் செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி இலக்கியச் செவ்வியல் தகுதிகள், கருத்தாக்கங்கள் குறித்து வெளிப்படுத்தாததும், வெளிப்படுத்தியதை கண்டுகொள்ளாததும் இக்காலத் தாமதத்திற்குக் காரணமாகும். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தனிநாயக அடிகள் சங்க இலக்கியங்களைச் "செவ்வியல் கவிதை" (Classical Poetry) என்று குறிப்பிட்டு தமிழ்மொழி இலக்கியச் செவ்வியல் தகுதிகளை எடுத்துக்காட்டியும் விளக்கியும் எழுதியுள்ளார். அவரது செம்மொழி நோக்குக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## காலம் கடந்தது

செவ்வியல் இலக்கியக் கருத்துக்கள் காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் தன்மை கொண்டதாக விளங்க வேண்டும். சங்க இலக்கியங்கள் என்றும் குன்றா இளமையுடன், புதுமையும், பசுமையும், அழகும், பொலிவும், புதியக் கருத்தும் பெற்று முக்காலத்திலும் ஒத்தியல் தன்மைக் கொண்டு விளங்குகிறது.

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னை
பழம்பொருளாய்ப், பின்னைப்
புதுமைக்கும் பெயர்த்துமப் பெற்றியவாய்
என்றும் சீரிளமைத் திறம்
வியந்து செயல் மறந்து வாழ்த்துமாறு
இன்பம் பெருகி வருகின்றது"
(அறிஞர் தனிநாயக அடிகள், தமிழ்த்தூது பக்.18)

என்னும் அடிகளின் கருத்து சங்கஇலக்கியம் காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் செவ்வியல் பண்பைப் பெற்றுள்ளதை நிறுவுகிறது.

## உலகப்பொதுமை

செவ்வியல் இலக்கியங்கள் குறிப்பிட்ட சூழ்நிலை, இடம், காலம், மனிதர் என்ற வரையறைகளைத் தாண்டி அனைவருக்கும் ஏற்ற உணர்வினை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். சங்க இலக்கியம் உலகப்பொதுமைப் பண்பு கொண்டுள்ளதை "இருபதாம் நூற்றாண்டுகட்கு முன்னமே தமிழறிஞர்கள் இதனை இனிதுணர்ந்திருந்தனர். உணர்ந்ததனை உயர்ந்த சொல் வடிவில் உரைத்துள்ளனர். (அறிஞர் தனிநாயக அடிகள், தமிழ்த்தூது பக்.18)" "யாதும் ஊரே யாவரும் கேளீர் (புறம் - 192)", "பெரிதே உலகம் பேணுநர் பலரே (புறம் - 207)", "எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே (புறம் - 206)" என்னும் சான்றுகளைக்காட்டி செவ்வியல் பண்பினை விளக்குகிறார். "செவ்வியல் இலக்கியம் உலகப்பொது உண்மைகளை வெளிப்படையாகக் கூறுகிறது. அது தெளிவு, எளிமை, உலகப்பொதுமை என்னும் ஹெர்பர்ட் ரீட்டு கருத்து மேற்கண்ட கருத்திற்கு அரண் சேர்க்கிறது. (சங்கச்செவ்வியல், செ. சாரதாம்பாள் ப.50 டிசம்பர் 2010)." மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் சங்க இலக்கியம் காலம் கடந்